புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • அக்டோபர் 26, 2023 • புரட்சி 23 • முழக்கம் 41 • விலை ரூ.3.00

# நம்பியூர் - ராசிபுரம் - நங்கவள்ளி - கோவை பகுதிகளில் கழக தெருமுனைக் கூட்டங்கள்

*__ஈரோடு வடக்கு :__ ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக 08.10.2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு நம்பியூர் பருத்திக்காட்டு மேட்டிலும், இரவு 7 மணிக்கு கோசணம் பகுதியிலும் நடைபெற்றது.*

*பகுதித் தோழர் புலவன்சிறை நடராஜன் தலைமை தாங்கினார். அறிவுக்கனல் - யாழ்மதி குழுவின் பரப்புரை பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.*

*மாவட்டக் கழக அமைப்பாளர் கோபி நிவாசு, கொளப்பலூர் சுப்ரமணியம் தொடக்கவுரையாற்றினர்.*

*தொடர்ந்து தலைமைக் கழக பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, இராம. இளங்கோவன் நிறைவுரை யாற்றினார்.*

*நிறைவாக ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார் நன்றி கூறினார்.*

*புலவன்சிறை நடராஜன், கோசனம் மயில்சாமி ஆகியோர் தேனீர் வழங்கினார். சுரேசு இரவு உணவை ஏற்பாடு செய்தார்.*

*கோபி அருளானந்தம், அளுக்குளி கிருஷ்ணமூர்த்தி, தூ.நா.பாளையம் ஒன்றியச் செயலாளர் கருப்பணன், காசிபாளையம் சின்னதம்பி, நம்பியூர் ஒன்றியச் செயலாளர் நம்பியூர் ரமேஷ், நடராஜன், செல்வன், கலைச்செல்வன், ராஜன் பாபு, குட்டி, புலவன்சிறை நடராஜன், மயில்சாமி, அறிவு கனல், அறிவரசன், யாழ்மதி, நம்பியூர் கதிர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

*__நாமக்கல் :__ ராசிபுரம் நகர கழகத்தின் சார்பில் 16.10.2023 திங்கள் கிழமை மாலை 6 மணியளவில் இராசிபுரம் புதிய பேருந்து நிலையத்தில் தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனை கூட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் பிடல் சேகுவேரா தலைமை வகித்தார், நகர அமைப்பாளர் சுமதி மதிவதனி வரவேற்பு வழங்கினார், நகரத் தலைவர் அன்பரசன் முன்னிலை வகித்தார்.*

*இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மாநில கட்டுப்பாட்டு குழு முன்னாள் உறுப்பினர் மணிவேல், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மண்டல துணைச் செயலாளர் அரசன், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மாவட்டத் துணைச் செயலாளர் கிருஷ்ணசாமி, விசிக நாடாளுமன்ற தொகுதி துணைச் செயலாளர் கபிலன், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாவட்டச் செயலாளர் மீனா, விசிக வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளர் நடராஜன், சிபிஅய் நகரச் செயலாளர் மணிமாறன், விசிக மேற்கு தொகுதி ஒன்றிய துணைச் செயலாளர் கோபி, வெண்ணந்தூர் ஒன்றிய அமைப்பாளர் செல்வகுமார், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.*

*கழக மல்லசமுத்திரம் ஒன்றிய பொறுப்பாளர் பெரியண்ணன், சிபிஅய் மாவட்ட நிர்வாகக் குழு செங்கோட்டையன், விசிக நகர நிர்வாகிகள் பூபதி, சுகுவளவன், அரவிந்தன், ஆதிகேசவன் விஜயகுமார், சிவசங்கர், அசோகன், செந்தில் சிபிஅய் நகரக் குழு ராஜா,பயாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.*

*கழக வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் நன்றி கூறினார்.*

*__கோவை :__ கோவை மாவட்டக் கழகம் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றுவருகிறது. தொடர்ந்து 9வது மற்றும் 10வது தெருமுனைக் கூட்டம் 19.10.2023 மாலை 4 மணிக்கு வடவள்ளி பி.என்.புதூர் மற்றும் ஆர்.எஸ்.புரம் காந்தி பார்க் ஆகிய இரண்டு இடங்களில் நிர்மல்குமார், ஸ்டாலின் ராஜா தலைமையில் நடைபெற்றது.*

*கூட்டத் தொடக்கமாக புரட்சி தமிழன் கலைஞரின் சாதனை விளக்கப் பாடல்களை பாடினார், தொடர்ந்து மாநகரச் செயலாளர் வெங்கடேசன், சூலூர் தமிழ்ச்செல்வி, திருப்பூர் முத்து, மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரத் தலைவர் நிர்மல் குமார் கருத்துரையாற்றினர். நிறைவாக கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி சிறப்புரையாற்றினார்.*

*மாதவன் நன்றி கூறினார்.*

*__சேலம் :__ நங்கவள்ளி கழகத்தின் சார்பில் எது சனாதனம் ? எது திராவிடம்? 9வது கூட்டம் பொட்டனேரி பேருந்து நிறுத்தத்திலும், 10வது கூட்டம் காமனேரி பேருந்து நிறுத்தத்திலும், 11வது கூட்டம் செம்மனூர் பகுதியிலும், 12வது கூட்டம் மல்லிகுந்தம் பகுதியிலும் மக்களின் பேராதரவுடன் நடைபெற்றது.*

*சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு-வின் பெரியாரியப் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது கூட்டத்திற்கு நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன் தலைமை தாங்கினார். க.அன்பழகன் திவிக மல்லிகுந்தம், இரா.விஜயகுமார் திவிக கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர், சி.தங்கதுரை சேலம் மாவட்ட இளைஞரணி தலைவர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நங்கவள்ளி நகர செயலாளர் சு.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.*

*தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மகிழவன், தமிழ்நாடு மாணவர் கழக சுகந்தன், தமிழ்நாடு மாணவர் கழக ஆர்.எஸ்.நாகராஜ், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ், கழக தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள்.*

*நிறைவாக வெள்ளார் சிவ சண்முகம் நன்றி கூறினார்.*

*நங்கவள்ளி பகுதி சந்திரசேகர், வனவாசி பன்னீர்செல்வம், மேட்டூர் பகுதி முத்துராஜ், புக்கம்பட்டி கணேசன், பொட்டனேரி ரவிக்குமார், மல்லிகுந்தம் ஆசிரியர் தினேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.*



# ஆயுதபூஜை - சரஸ்வதி பூஜை பற்றி அண்ணா

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ், இந்தியாவுக்கு வழி கண்டுபிடித்த வாஸ்கோடாகாமா, இந்தியாவை ஆதியில் ஜெயித்த அலெக்சாண்டர், இவர்களெல்லாம் ஆயுத பூஜை செய்தவர்களல்லர் நவராத்திரி கொண்டாடினவர்களல்லர்.

நூற்றுக்கு நூறு பேர் என்ற அளவில் படித்துள்ள மேனாட்டிலே சரசுவதி பூசை, ஆயுத பூசை இல்லை! ஏனப்பா கொஞ்சம் யோசிக்கக் கூடாதா?

ஓலைக் குடிசையும், கலப்பையும், ஏரும், மண்வெட்டியும், அரிவாளும், இரட்டை வண்டியும், மண்குடமும் உனக்குத் தெரிந்த கண்டுபிடிப்புகள்.

தீக்குச்சிப் பெட்டிகூட நீ செய்ததில்லை - கர்ப்பூரம் கூட நீ செய்ததில்லை. கடவுள் படங்களுக்கு அலங்காரத்துக்குப் போடும் கண்ணாடி கூட சரஸ்வதி பூஜை அறியாதவன் கொடுத்துதான் நீ கொண்டாடுகிறாய்.

ஒரு கணமாவது யோசித்தாயா, இவ்வளவு பூசைகள் செய்து வந்த நாம், நமது மக்கள், இதுவரை என்ன புதிய அதிசயப் பொருளைக் கண்டுபிடித்தோம். உலகுக்குத் தந்தோம் என்று யோசித்துப் பாரப்பா! கோபப்படாதே! உண்மை அப்படித்தான் கொஞ்சம் நெஞ்சை உறுத்தும், மிரளாமல் யோசி, உன்னையும் அறியாமல் நீயே சிரிப்பாய்.

உன் பழைய நாள்களில் இருந்த பேறறிஞர்கள் தங்கள் புண்ணிய நூல்களை எல்லாம்கூட, ஓலைச் சுவடியிலேதானே எழுதினார்கள். அந்த பரம்பரையில் வந்த நீ, அவர்கள் மறைந்து, ஆங்கிலேயன் வருவதற்கு இடையே இருந்த காலத்திலே அச்சு இயந்திரமாவது கண்டு பிடித்திருக்கக் கூடாதா? இல்லையே! மேனாட்டான் கண்டுபிடித்துத் தந்த அச்சு இயந்திரத்தின் உதவி கொண்டு உன் பஞ்சாங்கத்தை அச்சடித்துப் படித்து அக மகிழ்கிறாயே! அவன் கண்டுபிடித்த ரயிலில் ஏறிக்கொண்டு உன் பழைய அற்புதம் நடைபெற்ற திருத்தலம் போகிறாயே!

அவன் கண்டுபிடித்துக் கொடுத்த ரேடியோவிலே உன் பழைய பஜனைப் பாட்டைப் பாட வைத்து மகிழ்கிறாயே! எல்லாம் மேனாட்டன் கண்டுபிடித்துக் கொடுத்த பிறகு அவைகளை உபயோகப்படுத்திக் கொண்டு பழைய பெருமையை மட்டும் பேசுகிறாயே, சரியா? யோசித்துப்பார்.

சரஸ்வதி பூசை - விமரிசையாக நடைபெற்றது என்று பத்திரிகையிலே சேதி வருகிறதே! அது நாரதர் சர்வீஸ் அல்லவே! அசோசியேடட் அல்லது இராயட்டர் சர்வீஸ் - தந்தி முறை - அவன் தந்தது. தசரதன் வீட்டிலே இருந்ததில்லையே! இராகவன் ரேடியோ கேட்டதில்லை. சிபி, சினிமா பார்த்ததில்லை! தருமராசன், தந்திக் கம்பம் பார்த்ததில்லை! இவைகளெல்லாம் மிக மிகச் சாமான்யர்களான நமக்குச் சுலபமாகக் கிடைக்கிறது அனுபவிக்கிறோம்.

அனுபவிக்கும்போது கூட, அரிய பொருள்களைத் தந்த அறிவாளர்களை மறந்து விடுகிறோம், அவர்கள் சரஸ்வதி பூசை, ஆயுத பூஜை, செய்தறியாதவர்கள் என்பதையும் மறந்து விடுகிறோம்.

ரேடியோவில் இராகவனைப் பற்றிய பாட்டும், சினிமாவில் சிபிச்சக்கரவர்த்தி கதையும் கேட்டும், பார்த்தும் ரசிக்கிறோம். இது முறைதானா? பரம்பரை பரம்பரையாக நாம் செய்து வந்த சரஸ்வதி பூஜை; ஆயுத பூஜை நமக்குப் பலன் தரவில்லையே, அந்தப் பூஜைகள் செய்தறியாதவர், நாம் ஆச்சரியப்படும் படியான அற்புதங்களை, அற்புதம் செய்ததாக நாம் கூறும் நமது அவதார புருடர்கள் காலத்திலே கூட இல்லாத அற்புதங்களை அறிவின் துணை கொண்டு கண்டுபிடித்து விட்டார்களே என்று யோசித்தால் முதலில் கோபம் வரும். பிறகு வெட்கமாக இருக்கும். அதையும் தாண்டினால் விவேகம் பிறக்கும்.

யோசித்துப்பார் - அடுத்த ஆண்டுக்குள்ளாவது!

*- திராவிட நாடு - 26.10.1947*

## தலையங்கம்

# திராவிட ஆன்மீகமும் ஆரிய ஆன்மீகமும்

நாங்கள் ஆரியத்துக்கு எதிரிகளே தவிர ஆன்மீகத்துக்கு அல்ல என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் தகவல் தொழில்நுட்ப அணியினரிடம் பேசும் போது தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆரியத்தின் ஆன்மீகம் திராவிடத்தின் ஆன்மீகத்திற்கு நேர் எதிரானது. ஆரியம் – ஆன்மீகம் என்ற கருத்தியலை பார்ப்பனிய மேலாண்மைக்கு வெகுமக்களை தங்களுக்கு அடிமைப்படுத்தி வைக்கவும், வர்ணாசிரம கட்டமைப்பை நிலநாட்டவுமே பயன்படுத்துகிறது.

சொல்லப்போனால் ஆன்மீகம் என்ற வடமொழிச் சொல் தமிழருடைய வாழ்வியலோடு தொடர்புடையது அல்ல. மட்டுமின்றி ஆன்மீகம் மதத்துக்கு மட்டுமே உரித்தானது அல்ல, வள்ளலாரின் ஆன்மீகம், சைவம், வைணவம், சாதியம் மற்றும் உருவ வழிபாடுகளை எதிர்த்த திராவிட ஆன்மீகம் தான். “கடவுளை” கேள்விக்குட்ப்படுத்திய சித்தர்களும் ஆன்மீகவாதிகள் தான். பார்ப்பனிய வேத சடங்குகளை எதிர்த்த புத்தரும் ஆன்மீகவாதி தான். வேத காலத்திலேயே சார்வாகர், பிரகஸ்பதி போன்ற வேத எதிர்ப்பாளர்களும் இருந்திருக்கிறார்கள். வேதமதம் தான் அதற்கு எதிராக தோன்றிய சமணம், புத்தம், சைவம், வைணவ மதங்களை விழுங்கி ‘இந்து’ மதம் என்ற குடைக்குள் ஒளிந்துகொண்டது. இதற்கு பிரிட்டிஷார் உதவினார்கள். அதை இறந்து போன காஞ்சி சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகர் சரஸ்வதியும் பெருமையுடன் ஒப்புக்கொண்டார்.

ஆன்மீகத்தை தனதாக்கிக் கொண்ட ஆரியம், சனாதனம் என்று கோட்பாட்டையும் தனதாக்கிக் கொண்டு விட்டது. ஆரிய சனாதன எதிர்ப்பாளர்களை இந்து மத எதிர்ப்பாளர்கள் என்று முத்திரை குத்துகிறது. இவ்வளவுக்கும் பின்னால் பதுங்கி நிற்பது பார்ப்பனியம். பார்ப்பனர்கள் இல்லாமல் பார்ப்பனியம் என்ற சமூகக் கருத்தாக்கம் உருவாகி இருக்க முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மை. இது குறித்து டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு (10.10.2023) தனது ஆன்மீக கட்டுரைத் தொடர் பகுதியில் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையை சுட்டிக்காட்ட வேண்டும். சனாதன தர்மத்தை இந்துக்களுக்கான தர்மம் என்று ஆரியம் உரிமைக் கோருவது தவறு என்று சுட்டிக் காட்டுகிறது அந்த கட்டுரை. அதற்கு பெரியாரையே உதாரணமாக சுட்டிக்காட்டி உள்ளது. பெரியார் நாத்திக சிந்தனை கொண்டவர், புரோகித வர்க்கத்தின் சமூகக் கொடுமைகளை அவர் கேள்வி கேட்டார், மதத்தின் அடிப்படையில் ஒழுக்கங்கள் கட்டமைக்கப்படுவதை எதிர்த்தார்.

மனிதர்கள் அனைவரும் சமம் என்று முழங்கிய அவர், மாபெரும் சிந்தனையாளர். சமூகத்தில் சில பிரிவுகளை இழிவாக ஒதுக்கி வைப்பதை எதிர்த்து ஒருங்கிணைந்த சமூகத்தை உருவாக்க விரும்பினார். அவரை எப்படி சனாதன எதிர்ப்பாளர்கள் பட்டியலில் கொண்டுவர முடியும் என்று கேட்கிறது அந்த கட்டுரை.

ஆன்மீகம் என்ற வடமொழிக் கருத்தாக்கம், சிந்தனை மற்றும் வாழ்க்கை முறையை குறிக்கிறது என்கிறார்கள். பெரியார் பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை வாழ்க்கை முறையையும், சமத்துவ அறிவியல் சிந்தனையையும் வளர்த்தெடுக்க விரும்பினார். அனைத்து ஜாதியினருக்கும் அரச்சகராகும் உரிமை, கோயில் வழிபாட்டு உரிமை, தமிழில் வழிபாட்டு உரிமையை வலியுறுத்தினார். இதற்கு நேர்மாறாக ஆரிய பார்ப்பனியம் சூத்திரர்கள் என்று பெரும்பான்மை மக்களை அடிமைகளாக்கி அவர்கள் மீது திணித்த கல்வி மறுப்பு, உத்தியோகம் மறுப்பு, சம உரிமை மறுப்புகளை பெரியார் எதிர்த்தார். திராவிட உரிமைக்கு குரல் கொடுத்த பெரியார் சிந்தனைகளும் திராவிட ஆன்மீகம் தானே.

மக்களின் வாழ்வியலை பகுத்தறிவு, சுயமரியாதை, பெண், ஆண் சமத்துவம் என்ற பார்வையில் கட்டமைக்கிறது திராவிட ஆன்மீகம். குன்றக்குடி அடிகளார் அதைத்தான் செய்தார். பெரியாரும் அடிகளாரும் இந்த அடிப்படையில் தான் ஒரே மேடையை பகிர்ந்து கொண்டார்கள். ஆரிய ஆன்மீகம் பெரும்பான்மை மக்களை பிளவுபடுத்தி வெறுப்பை விதைத்து சமூக ஒற்றுமையை சீர்குலைக்கிறது. சமூக சமத்துவத்தைக் கோரும் திராவிட ஆன்மீகமே நமக்கானது. ஆரிய ஆன்மீகமான பாசிசம், மக்கள் விரோத கொள்கைகளை உள்ளடக்கியது.

# A2B ஓட்டல் மீது பாயும் சங்கிகள்

*ஒரு காலத்தில் ஓட்டல் தொழில் என்பது ’பிராமணர்களின்’ வசமே இருந்தது. பிராமணாள் கஃபே என்று பெயர் சூட்டினார்கள், ஆரிய பவன்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிறது, இதற்கு என்ன காரணம்?*

*சனாதன வாழ்க்கை என்று பெருமை பேசுகிற இந்த வாழ்க்கைமுறையில் ஒரு ஜாதிக்காரர் மற்றொரு ஜாதிக்காரர் வீட்டில் சாப்பிட மாட்டார்கள், இதுதான் கடந்த காலத்தில் இருந்த நடைமுறை. ஆனால் பார்ப்பனர்கள் சமைத்தால் அவர்களிடம் மட்டும் சாப்பிடுவார்கள், அதன் காரணமாகத்தான் திருமணங்களில் சமையல்காரர்களாக பார்ப்பனர்களை மட்டுமே அமர்த்தினார்கள். இதை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்ட பார்ப்பனர்கள் ஓட்டல் தொழிலிலும் இறங்கினார்கள்.*

*ஓட்டல் தொழில் நடத்துவது என்பது பிராமண தர்மத்திற்கு எதிரானது என்று மனுதர்மம் கூறுகிறது. மனுதர்மம் அத்தியாயம் 3; சுலோகம் 249, என்ன கூறுகிறது என்று சொன்னால் “எவன் சிரார்த்தம் செய்து அன்னம் முதலியவற்றை சூத்திரனுக்கு போடுகிறானோ அந்த மூடன் கால சூத்திரம் எனும் நரகத்தில் தலைகீழாக விழுகிறான்” என்று அந்த சுலோகம் சொல்கிறது. ஆனால் பார்ப்பனர்கள் தங்கள் வசதிக்காக எதையும் மாற்றிக் கொள்வார்கள், ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் பெரியார் நடத்திய பார்ப்பனரல்லாத இயக்கத்தால் பார்ப்பனரல்லாதாரும் ஓட்டல் துறையில் நுழைந்து கொடிகட்டிப் பறந்தனர்.*

*இதற்கு உதாரணம் சரவணபவன் ஓட்டல் நடத்திய ராஜகோபாலன் ஆவார். நாடார் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்த அவர், பார்ப்பனர்களிடம் இருந்து ஓட்டல் ஆதிக்க உரிமையை கைப்பற்றி தமிழ்நாடெங்கும் தனது கிளைகளைத் தொடங்கி வெற்றிநடைப் போட்டார்.*

*இன்று A2B என்ற ஓட்டல் தமிழ்நாடெங்கும் வெற்றிநடை போடுகிறது. இவர்களுடைய சிறப்பான உணவு, உபசரிப்பு ஆகியவற்றை மக்கள் மிகவும் விரும்புகின்றனர். தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாக நடைபெற்றுவருகிற அந்த ஓட்டல் பார்ப்பனரல்லாதாருக்கு உரிமையுடையது.*

***A2B ஓட்டல் உரிமையாளர் கடந்த வாரம் ஒரு யூடியூப் சேனலுக்கு அளித்த பேட்டியில் :- தன்னுடைய ஒரு ஓட்டலில் கடவுள் படங்களுடன் பெரியார் படங்களையும் வைத்திருப்பதை சுட்டிக்காட்டினார். ஏன் பெரியார் படம் வைத்திருக்கிறேன் என்பதை பற்றி அவர் கூறுகையில் நாங்களெல்லாம் ஓட்டல் நடத்துவதற்கு வழிவகை செய்தவர் தந்தை பெரியார் என்று அவர் துணிச்சலோடு கூறியிருக்கிறார்.*** *உடனே சங்பரிவார கும்பலுக்கு கோபம் வந்துவிட்டது. பிராமணர்களை புண்படுத்துகிறார்கள், A2B ஓட்டலை புறக்கணிப்போம் என்று முகநூல் மற்றும் ட்விட்டரில் ட்ரெண்ட் செய்து இயக்கம் நடத்துகிறார்கள்.*

*2023லும் கூட இப்படி ஒரு சிந்தனை மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு மதவாதம் ஆழமாக புதையுண்டு கிடப்பதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எனவே ஓட்டல் துறையில் சாஸ்திரத்துக்கு எதிராக பார்ப்பனர்கள் ஈடுபட்டாலும் அது குற்றமில்லை, ஆனால் பார்ப்பனரல்லாதார் கொடிகட்டிப் பறந்ததற்கு காரணம் பெரியார் என்று கூறினால் அவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.*

# நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம் ; கழகத் தலைவர் தொடங்கி வைத்தார்



*தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி - மாணவர் அணி - மருத்துவர் அணி சார்பில் நீட் விலக்கு! நம் இலக்கு! மாபெரும் கையெழுத்து இயக்கம் 21.10.2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அரங்கில் தொடங்கி நடைபெற்றது.*

*இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஸ்வரன், மாணவரணி அமைப்பாளர் பெரியண்ணன், மருத்துவரணி அமைப்பாளர் பெருமாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்ரமணி மற்றும் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் கலந்து கொண்டு நீட் விலக்கு! நம் இலக்கு! மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தனர். அதனையடுத்து மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர்.*

*நிகழ்வில் மாவட்டத் தலைவர் வேணுகோபால், மாவட்டச் செயலாளர் சந்தோசு குமார், மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.*

# வரலாறுகளை அறியாத இளையபெருமாள்

கொளத்தூர் மணி

தனித் தொகுதி முறைக்கு எதிராக - காந்தியார் நடத்திய உண்ணாவிரதத்தை தொடர்ந்து காந்தியாரை சந்திக்குமாறு பலரும் அம்பேத்கர் அவர்களை நேரில் சந்தித்து வற்புறுத்தினர்; பெரும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நடந்த சந்திப்பு, விவாதங்கள், இறுதியில் தனித் தொகுதி முறையைக் கைவிட ஒப்புக் கொண்டும், பொதுத் தொகுதி முறையை சில நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொண்டும் பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதனைத்தான் இளைய பெருமாள், யார் 32 ஆம் ஆண்டு ஒப்பந்தம் போட்டாரோ அவரே 46 ஆம் ஆண்டில் அது சரியானது இல்லை என்று சொன்னார் என்று அம்பேத்கர் குறித்து விமர்சனமாகக் கூறியுள்ளார். 1932இல் பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட அம்பேத்கர் எளிதில் ஏற்றுக் கொண்டாரா? முழு மனதுடன் ஏற்றுக் கொண்டாரா? என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

1932 மார்ச் மாதத் தொடக்கத்திலேயே காந்தியார் தீண்டத்தகாத இந்துக்களையும், ஜாதி இந்துக்களையும் பிரிக்கின்ற எந்த ஒரு முயற்சியும் என் உயிரை கொடுத்தேனும் தடுப்பேன் என்று அறிவித்திருந்தார். 17.8.1932 அன்று தனித் தொகுதி, இரட்டை வாக்குரிமையை ஏற்று பிரிட்டன் பிரதமர் அறிவித்தவுடன் மேலும் களம் பரபரப்பானது. காந்தியாரும் 20.9.1932 முதல் சாகும்வரை (கோரிக்கை நிறைவேறும் வரைகூட இல்லை) உண்ணாநிலைப் போராட்டம் அறிவித்தார். அது குறித்து விவாதிக்க 19.9.1932 அன்று பம்பாயில் இந்து தலைவர்களின் மாநாடு ஒன்று நடத்துவது என சிம்லாவில் இருந்து பண்டித மதன் மோகன் மாளவியா அறிவித்தார். அம்பேத்கருக்கும் தந்தி மூலம் அறிவித்து அழைப்பு விடுத்தார். தெளிவானதொரு மாற்றுத் திட்டத்துடன் வந்தால் பரிசீலிக்கலாம் என அம்பேத்கர் அறிவித்தார்.

மேலும் அறிக்கை ஒன்றையும் அம்பேத்கர் வெளியிட்டார். அதில் "நாட்டின் சுதந்திரத்துக்காக சாகும் வரை உண்ணாவிரதம் என்ற அந்த உச்சகட்ட நடவடிக்கையை காந்தியார் மேற்கொண்டு இருந்தால் அதில் நியாயம் இருக்கிறது; அவருடைய உயிர் துறக்கும் முயற்சிக்கு தீண்டப்படாத வகுப்புக்கு தனி பிரதிநிதித்துவம் தரப்பட்டுள்ளதை காந்தியார் காரணமாய் காட்டியிருப்பது வியப்பும் வருத்தமும் தருகிறது"

"மகாத்மா அழிவே இல்லாத மனிதர் அல்ல. மகாத்மாக்கள் வந்தார்கள்; மகாத்மாக்கள் மறைந்தார்கள். ஆனால் தீண்டப்படாதவர்கள் மட்டும் தீண்டப்படாதவர்களாகவே இருக்கிறார்கள்" என்ற செய்திகள் அடங்கிய அறிக்கை அது

19.9.1932 அன்று நடைபெற்ற இந்து தலைவர்களின் மாநாட்டில் முதலாவதாக பேச அம்பேத்கர் அழைக்கப்பட்டார். "தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனுக்கு எதிராக காந்தியார் உண்ணா நோன்பு தொடங்கியிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். காந்தியின் ஒப்பற்ற உயிரைக் காப்பாற்ற ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும் என்பது மிகவும் சரியானது தான்; ஆனால் காந்தியிடமிருந்து மாற்று யோசனை எதுவும் வராத நிலையில் நான் எப்படி முடிவு செய்ய முடியும்" என்று அந்த உரையில் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதற்கிடையில் உண்ணாவிரதம் தொடங்கியதற்கு அடுத்த நாள் (21.9.1932) காந்தியார் அம்பேத்கரையும், அவருடைய கோரிக்கைக்கு எதிரானவராக உருவாக்கப்பட்டிருந்த எம்.சி.ராஜாவையும் நேரில் சந்தித்து அவர்கள் மனதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்ற விருப்பத்தை தன்னை சந்திக்க வந்த தலைவர்களிடம் 21.9.1932 அன்று காலை 7 மணிக்கு தெரிவித்துள்ளார். அன்று காலையிலேயே முதலில் எம்.சி ராஜா சந்தித்து உரையாடினார்.

மாலையில் அம்பேத்கர் சந்தித்தார். "மகாத்மாவே நீங்கள் எங்களிடம் நியாயம் இல்லாமல் நடந்து கொள்கிறீர்கள்" (Mahatmaji, you have been very unfair to us) என்று அம்பேத்கர் தன் உரையாடலைத் தொடங்கியுள்ளார். அந்த பேச்சுவார்த்தையின் போது ஒரு செய்தியை மட்டும் அவர் திரும்பத் திரும்பக் கூறினார், எல்லோருக்கும் அந்த வாக்கியம் கேட்டது எனக்கு (எங்களுக்கு) உரிய நட்ட ஈடு வேண்டும் (I want my compensation) என்பதுதான் அது.

காந்தியார் முதல் நிலை தேர்வு குழுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் அது தாழ்த்தப்பட்டவர்களை இந்துக்களிடமிருந்து பிளவுபடுத்தும் என்ற தன் கருத்தை வலியுறுத்தினார். தொடர் அழுத்தங்களும் தனது மக்களே பாதிப்புக்குள்ளாகலாம் என்ற சிந்தனையும் அம்பேத்கர் மனதில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. "மாத்மாவே கூட்டுத் தொகுதி முறையை ஏற்றுக் கொண்டு நான் உங்களுக்கு சலுகை அளித்து



விட்டேன்" என்று அம்பேத்கர் முடித்துக் கொண்டார்.

இதற்கிடையில் பம்பாயில் கூடிய இந்து மகாசபை கூட்டத்தில் வகுப்புவாரி தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு கடிதங்களையும் தந்திகளையும் பிரிட்டன் பிரதமருக்கு அனுப்புமாறு சுநிலால் மேத்தா பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். மொத்தத்தில் பம்பாய் நிலைமை மோசம் அடைந்து வந்தது.

மறுநாள் 23.9.1932 வெள்ளிக்கிழமை டாக்டர் அம்பேத்கரோடு அவரது தென்னிந்திய, வங்காள நண்பர்களும் வந்து சேர்ந்தனர். ஏற்கனவே தனித் தொகுதியாய் அறிவித்திருந்த 71 இடங்களுக்குப் பதிலாக, பொதுதொகுதியாய் அம்பேத்கர் 197 இடங்களைக் கேட்டார். மத்திய சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிற்பகல் நான்கு மணி ஆகிவிட்டது. டாக்டர் அம்பேத்கரும் அவரது நண்பர்களும் ஒவ்வொரு கட்டத்திலும் நின்று போராடினார்கள்.(The redoubtable Doctor, supported by his colleagues fought every inch of ground) இதற்கிடையில் காந்தியாரின் உடல்நிலை மோசமாகி வந்தது.

மறுநாள் 24 9 1932 சனிக்கிழமை பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியது. ஒதுக்கப்படும் பொதுத் தொகுதி இடங்களின் எண்ணிக்கை 147 என்று முடிவு செய்யப்பட்டது. பிற்பகல் 4 மணிக்கு காந்தியாரை சந்திக்க அம்பேத்கர் சிறைக்கு வந்தார். காந்தியார் உறுதியான குரலில் அம்பேத்கர் இடம் கூறினார், "எது வேண்டும்? உங்கள் கோரிக்கை அல்லது எனது உயிர்" என்றார். மனிதாபிமானம் மிக்க டாக்டர் அம்பேத்கர் இணங்கினார். அன்று (24.9.1932) மாலை பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது.

மேற்கண்ட செய்திகள் அனைத்தும் காந்தியாரின் தனிச்செயலாளர் பியாரே லால் எழுதிய இந்த (Epic Fast) பட்டினிக் காவியம் என்ற நூலில் காணப்படுபவையே.

24.9.1932இல் பூனா எரவாடா சிறையில் காந்தியார் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட பூனா ஒப்பந்தம் குறித்து அடுத்த நாள் 25.9.1932இல் பம்பாயில் நடந்த சமரச மாநாட்டில் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பேசிய டாக்டர் அம்பேத்கரின் உரை 2.10.1932 ஆம் நாளிட்ட 'குடிஅரசு' வார ஏட்டின் 8ஆம் பக்கத்தில் முழுவதுமாக வெளியிடப்பட்டுள்ளது.

அதன் முக்கிய பகுதிகள்:

சில தினங்களுக்கு முன் என் நிலை இருதலைக்கொள்ளி எறும்பு போல் இருந்தது. எனது நிலையை விட வேறு எவரும் அவ்வளவு சங்கடமான நிலையில் இருந்திருப்பார்கள் என்று கூற முடியாது. நான் இரு முக்கிய விஷயத்தில் எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பதை அறியாமல் திணறினேன். ஒருபுறம் உலக சிரேஷ்டர் என விளங்கும் ஒரு மகானின் உயிர் ஆபத்தில் இருக்கிறது; மற்றொரு பக்கம் எனது சமூகத்தினரின் நல உரிமையை பாதுகாக்க வேண்டிய கடமை எனக்கு இருந்தது. இதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது அறியாமல் திண்டாட்டினேன். இறுதியில் மகாத்மாவின் உயிரைப் பாதுகாக்கக் கூடியதும் எதிர்காலத்தில் என் சமூகத்தின் நல உரிமைகளைப் பாதுகாக்க கூடியதுமான ஒரு சமரச முடிவுக்கு வந்துள்ளோம்.

லண்டன் மாநாட்டில் எனது கொள்கைக்கு முற்றிலும் மாறாக என்னை எதிர்த்து வந்த அவர் - மகாத்மா காந்தி, தற்போது எனது கொள்கையை ஆதரித்தது எனக்கு சாதகமாய் இருந்தது.

"ஆனால் நான் சம்பத்தப்பட்ட வரையில் தீண்டாதாருக்குத் தனித் தொகுதி வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். அந்த அபிப்பிராயத்தை என்னால் மாற்றிக் கொள்ள முடியாது".

"இந்து வகுப்பைச் சார்ந்த தீண்டாதாருக்கு கூட்டுத்தொகுதியே கடைசி முடிவாக இருக்க வேண்டும் என்பதையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது".

பூனா ஒப்பந்தத்திற்கு அடுத்த நாள் பம்பாயில் நடந்த சமரச மாநாட்டில் ஆற்றிய உரையே அம்பேத்கருக்கு பூனா ஒப்பந்தத்தில் முழு நம்பிக்கை இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது அல்லவா? ஆனால் இளையபெருமாள் அவர்களோ "1932 இல் ஒப்பந்தம் போட்ட டாக்டர் அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டில்தான் அது சரியானது இல்லை" என்று சொன்னதாகக் கூறியுள்ளார். மேலும் 1942இல் நாக்பூரில் நடந்தது அந்த மூன்று நாள் மாநாடு. (அதுவும் 1942 ஆம் ஆண்டில் வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராக பதவி ஏற்பதற்கு முன்னதாக 1942 ஜூலை 18,19,20 ஆகிய நாட்களில் நாக்பூரில் மாநாடுகளை நடத்தினார் புரட்சியாளர் அம்பேத்கர். இப்போது பெரிதும் கையாளப்படும் "கற்பி, போராடு, ஒன்று சேர்" அதாவது "அறிவூட்டு, உணர்வூட்டு, அமைப்பாக்கு" Educate Agitate and Organise என்ற முழக்கம் அந்த மாநாட்டு உரையில் தான் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் கூறினார்). அம்மாநாட்டை 1946இல் நடந்ததாக இளையபெருமாள் மாற்றிக் கூறியுள்ளார். தோழர் ரவிக்குமாரும் அப்படியே அதனை அவரது நூலில் பதிவும் செய்துள்ளார். ஒடுக்கு முறைக்கு தொடர்ந்து ஆளாக்கப்படும் மக்களின் முன்னணித் தலைவராகக் கருதப்படும் இளையபெருமாள் அவர்கள் தனித்தொகுதி, இரட்டை வாக்குரிமை குறித்தும், பூனா ஒப்பந்தம் குறித்தும், நாக்பூர் மாநாடு குறித்தும் அறிந்து கொள்ளாமல்தான் 1998 வரை இருந்தாரா? அந்தோ! பரிதாபம்!

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் பெரியார் இருந்தார் என்றும், ஜாதி இந்து மனப்பான்மையோடுதான் அவரது செயல்பாடுகள் இருந்தன" என்றும் தோழர் பாலசிங்கம் ராஜேந்திரன் தனது 'இளையபெருமாள் வாழ்க்கை சரித்திரம்' என்ற நூலில் பதிவிட்டும் உள்ளார்.

தனித் தொகுதி, இரட்டை வாக்குரிமை, பூனா ஒப்பந்தம் ஆகியன குறித்து பெரியார், சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி ஆகியோரின் நிலைப்பாடு எவ்வாறு இருந்தது? அதையும் கொஞ்சம் பார்ப்போம்!

சுயமரியாதை இயக்கத் தலைவரான பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 'பெண்களைத் தூண்டி விட்டதாக' குற்றஞ்சாட்டப்பட்டு 6.12.1938 அன்று பெரியாருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை பெற்ற அவரை சென்னை சிறையில் வைத்திருந்து, அடுத்து பெல்லாரி சிறைக்கு மாற்றம் செய்தார்கள். பெல்லாரி சிறையில் இருந்தபோதுதான் 1938 டிசம்பர் இறுதியில் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (நீதிக் கட்சியின்) மாநாடு பெரியாரைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தது. சிறை தண்டனை முடிந்து விடுதலை ஆகி வந்த பின்னர், நீதிக் கட்சி நடவடிக்கைகளை அறிந்து கொள்ளவும், அதன் தொடர் செயல்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும் இருமுறை நீதிக் கட்சியின் நிர்வாகக் குழு கூட்டம் கூடி விவாதங்களை மேற்கொண்டது. அடுத்து 1940 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 ஆகிய நாட்களில் 15ஆவது மாகாண மாநாடு திருவாரூரில் நடைபெற்றது.

மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சர்.ஏ.டி.பன்னீர்செல்வம், இந்தி எதிர்ப்புப் போராளிகள் நடராசன், தாளமுத்து, கட்சியின் முன்னணித் தோழர்கள், மைசூர் அரசர் போன்றோருக்கு இரங்கல் தீர்மானமும், இந்தித் திணிப்பு ஆணையைத் திரும்ப பெற்றதற்கு நன்றி கூறும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன

அடுத்தத் தீர்மானம் 'ஆதி திராவிடர் தனித் தொகுதி' என்ற தலைப்பில் முன்மொழியப்பட்டது.

"ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு சர்க்காரால் அளிக்கப்பட்ட தனித்தொகுதி காப்பு முறை பூனா ஒப்பந்தத்தால் அழிக்கப்பட்டு சமுதாயத்திற்கு சரியான பிரதிநிதிகள் வராமல் செய்யப்பட்டு விட்டதால், இனி வரும் தேர்தல்கள் யாவற்றிலும் தனித் தொகுதி முறையே ஏற்படுத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் குறித்தும், பிற தீர்மானங்கள் குறித்தும் பெரியார் தனது தலைமை உரையில் பேசியுள்ளார். அதில் குறிப்பாக தனித் தொகுதி என்ற தலைப்பில் இயற்றப்பட்ட தீர்மானத்தை குறித்தும் பேசியுள்ளார். நம் நாட்டை போல் உள்ள, அதாவது

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சரஸ்வதி, ஆயுதபூஜைகள் : புனிதமா? வணிகமா?

***ஆயுதபூஜை, சரஸ்வதி பூஜை, தீபாவளி போன்ற மதப் பண்டிகைகளின் உள்ளடக்கங்கள் இப்போது மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. புனிதம் என்ற நிலையில் இருந்து வணிகம் என்ற நிலைக்கு மாறிப்போய் விட்டது. சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் இந்த மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை.***

*நமது நாட்டில் கல்விக்காக ஒரு கடவுள் இருக்கிறது. சரஸ்வதி பூஜை, அதற்காக விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. நான்கு நாட்கள் தொடர் விடுமுறை என்பதால் எல்லோரும் சொந்த ஊருக்கு பயணமாகிறார்கள். விடுமுறையை ஒரு கொண்டாட்ட நாளாக அவர்கள் கொண்டாடுகிறார்கள். புதிய திரைப்படங்கள் வெளியாகின்றன, பத்திரிகைகள் மலர்களை வெளியிட்டு வியாபாரம் செய்கின்றன, நகைக்கடைகள் தள்ளுபடி விலையில் நகைகளை விற்பனை செய்கின்றன, இவைகள் தான் இன்றைக்கு சரஸ்வதி பூஜையின் அடையாளமாக மாறிப்போய் விட்டது.*

*கல்வி உரிமையை ஒன்றிய பாஜக ஆட்சி பறித்துக் கொண்டு வருகிறது. நீட் தேர்வு, இந்தி திணிப்பு, கல்வியை மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றி எல்லாவற்றையும் தனதாக்கிக் கொண்டு பாஜக சரஸ்வதி பூஜைக்கு வாழ்த்துக் கூறி இந்துமத பண்டிகையாக அதை அடையாளச் சின்னமாக வைத்துக் கொண்டுள்ளது. எங்களுக்கு ஏன் கல்வியைத் தரவில்லை, எங்கள் மீது ஏன் நீட்டை திணிக்கிறீர்கள் என்று இப்போது யாரும் சரஸ்வதியிடம் போய் முறையிடுவதில்லை. ஒன்றிய ஆட்சியை எதிர்த்து தான் மக்களிடம் சென்று கையெழுத்து இயக்கங்களை நடத்த வேண்டியுள்ளது.*

*செல்வத்திற்கான கடவுள் லட்சுமி என்கின்றார்கள். ஆனால் செல்வத்திற்கான லட்சுமியை அம்பானி, அதானி, பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே உரியவர் என்றாக்கிவிட்டார் பிரதமர் மோடி. சாதாரண ஏழை எளிய மக்களிடம் இருந்து லட்சுமியை அவர் பிரித்தெடுத்து விட்டார். சொல்லப்போனால் ஏழை எளிய இந்துக்களுக்கு மோடி செய்யும் மகத்தான துரோகம் என்று கூட இதை சொல்லலாம். ஆக பண்டிகைகள் என்பது மதங்கள், புனிதங்கள் என்ற நிலையில் இருந்து விலகி வணிகங்கள், வியாபாரங்கள், கொண்டாட்டங்கள் என்ற நிலைமைக்கு மாறுவதோடு கல்வியை அனைவருக்கும் சமமாக்க வேண்டும், செல்வத்தை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கொள்கையையும் இல்லாமல் செய்துவிட்டது. ஆனாலும் கூட பழக்கத்தின் காரணமாக நாம் இந்த பண்டிகைகளை கொண்டாடி கொண்டிருக்கிறோமே தவிர இந்து மதம் அப்படியே உயிர்த்துடிப்போடு இருந்து வருகிறது என்பது இதன் அர்த்தமல்ல.*

*- இரா*

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு சென்னையில் உற்சாக வரவேற்பு

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக சென்னை வந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் உற்சாகமான வரவேற்பை தந்துள்ளது.

கிரிக்கெட் ரசிகர்கள் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி – இது 'திராவிட பூமி' என்பதை நிரூபித்துள்ளனர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வீரர் இமாம் உல் ஹக் வரலாற்றுரீதியாக சென்னையில் பாகிஸ்தான் அணிக்கு நல்ல ஆதரவு இருந்துள்ளது. அந்த ஆதரவு எங்களுக்கு உத்வேகத்தை கொடுக்கும் என்று கூறியுள்ளார்.

அகமதாபாத் கிரிக்கெட் மைதானத்தில் பாகிஸ்தான் வீரர்களை பார்த்து 'ஜெய் ஸ்ரீ ராம்' என்று மதவெறிக் கூச்சல் போட்டார்கள். அது இந்துத்துவம், இது தமிழ்நாடு.

3ஆம் பக்க தொடர்ச்சி

# பூனா ஒப்பந்தம் ; அம்பேத்கரை ஆதரித்தார், பெரியார்

கொள்கைகளிலும், லட்சியங்களிலும் சமுதாயத் துறையிலும் பல மாறுதல்கள் கொண்ட மக்களை உடைய ஒரு நாட்டில் தெரிந்திருக்கப்படும் பிரதிநிதி ஒவ்வொருவரும் அந்தந்தக் கொள்கைக்கும் லட்சியங்களுக்கும் ஏற்ற வகுப்பு, வர்க்க மக்களாலேயே தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் தேர்தல்களில் பிரவேசிக்க இடம் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் உண்மையான பிரதிநிதிகள் வர முடியும். சட்டசபையில் இருக்கும் போதும், பதவி பெறும் போதும் தனது வகுப்பு மக்களால் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதி என்பதும் ஞாபகத்தில் இருக்க வேண்டும். எப்படி எனில் வியாபார வகுப்புக்கு வியாபார பிரதிநிதியும், கற்றோருக்கு கற்றோர் பிரதிநிதியும், ஐரோப்பியருக்கு ஐரோப்பிய பிரதிநிதியும், முஸ்லிமுக்கு முஸ்லிம் பிரதிநிதியும், கிறிஸ்தவர்களுக்கு கிறித்துவ பிரதிநிதியும் இருப்பது போல் ஆதிதிராவிடர்களுக்கு ஆதிதிராவிடப் பிரதிநிதி இருக்கவேண்டும்; அந்தந்த வகுப்புப் பிரதிதியே இருக்க வேண்டும்.

இந்நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் சிக்கலுக்கு முக்கியக் காரணம் புலி போலவும் ஆடு போலவும் உள்ள பல வகுப்பு மக்களையும் ஒரு பட்டியில் அடைத்து கையில் வலுத்த எந்த வகுப்பாரையும் விட்டு வேட்டையாட செய்துவிட்ட கொடுமையாகும். அதனாலேயே பலமற்ற ஒவ்வொரு வகுப்பு மக்களும் அவர்கள் எவ்வளவு பெரும்பான்மையாக இருந்தும், பொதுப்பட்டியிலிருந்து தப்பித்து ஓடி தனி பாதுகாப்பு தேடிக் கொள்ள வேண்டியதாயிற்று. எதிரிகளிடம் அடைக்கலம் போக வேண்டியதாயும் ஆயிற்று. ஆதலால் இப்படிப்பட்ட வகுப்பு கூட்டங்களில் இருந்து சிறுபான்மை பெரும்பான்மை பார்ப்பது என்பது விஷயம் அறியாத காரியமேயாகும்.

இதுபோலவே எனது ஆதிதிராவிட வகுப்பாரும் நம் எல்லோருடைய கூட்டுறவு முயற்சியாலும் அடைந்த தனித்தொகுதி உரிமையை, பூனா ஒப்பந்தத்தின் பேரால் இழந்து விட்டு முன்னிருந்த நிலையை விட மிக மோசமான நிலைமைக்கு போக நேர்ந்த தவறுகளை உணர்ந்து இனிமேலாவது கட்டுப்பாடாய் எச்சரிக்கையாக இருந்து பூரண, பரிசுத்த தனித் தொகுதி முறையை வலியுறுத்தி வெற்றி பெற வேண்டும். அதற்காக நாமும் நம்மாலான எல்லாவித ஒத்துழைப்பையும் அளிக்கத் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம். (குடிஅரசு. 25.8.1940)

இவ்வாறான கருத்துகளைக் கொண்டவர்கள் ஜாதி இந்து மனப்பான்மையோடு இருப்பவர்களாம்! ஆனால் தான் தலையேற்று நடத்தும் சமுதாயத்தின் கோரிக்கைகள், வழங்கப்பட்ட உரிமைகள், அவை சூழ்ச்சியால் பறிக்கப்பட்ட துரோகம், அதனை அம்பேத்கர் போன்றோர் ஏற்றார்களா? எதிர்த்தார்களா? என்று கூட அறிந்துகொள்ளாத பேதமை கொண்டோர்கள் சமுதாயத்தின் தலைவர்களாம்!

கே.பி.எஸ். மணி அவர்களின் வாழ்க்கை வரலாறு கூட அவர் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்டதல்ல. 1990இல் காலமான அவரது வரலாறு 2005இல் எழுதப்பட்டுள்ளது. அவரது சட்டமன்ற உரைகள் (நில உச்ச வரம்பு சட்டம், கீழ்வெண்மணி, கணபதியாப் பிள்ளை கமிஷன்) ஆகியவை அவரது நேர்மையான சிந்தனைப் போக்கை வெளிப்படுத்துகின்றன. எப்படியோ நூலாசிரியர் தங்கள் தலைவரைப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி யிருக்கலாம்; அல்லது தான் வெறுப்பை விதைக்க நினைக்கும் தலைவரை சிறுமைப்படுத்தும் முயற்சியாகக் கூட இருக்கலாம்! ஆனால் இளைய பெருமாள் அவர்கள் வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டது அவர் வாழ்ந்த காலத்தில். அதுவும் அவராலேயே சொல்லப்பட்டு அதனை ஒலிப்பதிவு செய்து எழுதப்பட்டது. 'சித்திரை நெருப்பு' ஆகட்டும் 'தலித்' இதழின் நேர்காணல் ஆகட்டும், இரண்டும் ஒலிப்பதிவு செய்யப்பட்டவையே என முன்னுரை, அடிக்குறிப்பு ஆகியவை கூறுகின்றன. எப்படி உண்மைக்கு மாறான இத்தனை செய்திகளைக் கொண்டிருக்கிறது? காரணம் என்னவாக இருக்கும்? காரணம் யாராக இருக்கலாம்? அவற்றை உங்கள் சிந்தனைக்கே விடுகிறோம்.

பார்ப்பனியத்தால், சனாதனத்தால் காலம் காலமாக உரிமைகள் பறிக்கப்பட்டு, இழிவுகள் சுமத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் கிடந்த சூத்திர, பஞ்சமர்கள் எனப்படுவோர் ஒரு நூற்றாண்டாகத் தான் தட்டுத் தடுமாறி எழுந்து கொண்டுள்ளோம். இந்தக் கொடுமைகளில் இருந்து தப்பிக்க சுயமரியாதை தரும் மதங்களை நோக்கி சென்ற நம்மவர்களை, அரசியல் சாராத சங்கப் பரிவாரங்கள், தேர்தல் அரசியலில் ஆட்சியில் அமர்ந்துள்ள பா.ஜ.க ஆகியோர் விதவிதமான பொய்களைப் பரப்பி எதிரிகளாகக் கட்டமைப்பதில் வெற்றியடைந்து வருகிறார்கள்; அவர்களை மீண்டும் இந்துமத நுகத்தடியில் பிணைக்கவும் துடிக்கிறார்கள்; அந்த அபாயத்தைச் சுட்டிக்காட்டும் நம் எல்லோரையும் எதிரிகளாகக் காட்டுகிறார்கள். அறியாமையாலோ, ஆதாயம் தேடவோ அவர்களுக்கு அனுமார்களாக, விபீஷணர்களாக இயங்குகிற நம்மவர்களைக் கொண்டே வன்முறைகளை நிகழ்த்தவும், ஆட்சி பீடம் ஏறவும் முயற்சிக்கிறார்கள். இந்த வேளையில் கைகோர்த்து இயங்க வேண்டிய நமக்குள் இவ்வாறான விமரிசனங்கள், எதிர் விமரிசனங்கள் தேவையா என்றுதான் தோன்றுகிறது.

ஆனாலும் 1998, 2010இல் வெளிவந்தபோது எடுத்து விளக்கத் தவறியதால்தானே 2023இல் அந்த செய்தி மீண்டும் பதிவாகிறது. காலப்போக்கில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது என்பதாக ஆகிவிடுமே என்ற ஆதங்கமே இப்போதேனும் விளக்கிவிட வேண்டும் என்று நம்மை எழுத வைத்தது.

**பொது எதிரியை அம்பலப்படுத்துவோம்!**
**பொதுமை மலர ஒன்றிணைவோம்!**
**சனாதனத்தை வீழ்த்திடுவோம்!**
**சமத்துவ சமூகம் படைத்திடுவோம்.**

(நிறைவு)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 27, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran